மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில், 110 மெகாவாட் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி, நடப்பாண்டில் தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடப்பாண்டில், பணிகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இருட்டில் கிடந்த தமிழகத்தை வெளிச்சப் பாதைக்குக் கொண்டுவந்து, நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், என்னுடைய மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் 110 மெகாவாட் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு, இந்த நடப்பாண்டே அமைத்துத் தரப்படும் என்று சொன்ன டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 344, திரு. ப. பொன்னம்பலம். மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

344—

நுகர்வோர் கடன்

***7879—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைகளின் மறுவாழ்விற்கு கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்வோர் கடன் திட்டத்தின்கீழ், கடன் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2003 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில், நுகர்வோர் கடன் திட்டத்தின்கீழ், விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற கடன் திட்டம் ஏதும் தனியாக இல்லை. என்றாலும்கூட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் செயல்படுத்தபபடும் மகளிர் சிறுவணிகக் கடன் மூலமாக, இந்த விதவைத் தாய்மார்கள் பயனடையலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்வோர் கடன் திட்டத்தில், தமிழகத்தில் உள்ள அனைத்து விதவைகளுக்கும் கடன் கொடுக்கும் திட்டத்தினை அளிக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதனையும், விதவைகளின் துன்பத்தையும், துயரத்தையும் போக்கும் வண்ணம், அம்மாவின் ஆட்சியில் நீண்டகாலக் கடன் உதவிகளை அளித்து, ஒளியிழந்த அவர்களின் வாழ்க்கையில் விளக்கேற்றி வைக்குமா என்பதனையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், ரூ.25 இலட்சம் வைப்புத் தொகைக்கு மேல் இருக்கிற அந்த வங்கிகளின் மூலமாகப் பெண்களுக்கு, விதவைத் தாய்மார்களுக்கெல்லாம் சிறுவணிகக் கடன் தந்து கொண்டிருக்கிறார்கள். அது, ரூ.100-லேயிருந்து ரூ. 5 ஆயிரம் வரை தருவதற்கு இந்த அரசு நன்முயற்சி எடுத்துக்கொண்டு வந்திருக்கிறது. மேலும், தாய்மார்களுக்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்புத் திட்டங்களாகப் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன், நம்முடைய மாநிலத்தில், ரூ.1,718 இலட்சம் அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று உழைக்கும் மகளிர் கடன் திட்டத்தின்கீழ், ரூ.1,127 இலட்சம் மகளிருக்காக வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று, மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின்கீழ், நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர் ரூ.291 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, இந்தக் கடன்

வசதிகளின் மூலமாக, விதவைத் தாய்மார்களும், மகளிரும் வங்கிக் கடனைப் பெற்றுப் பயனடையலாம் என்பதை மாமன்றத்திற்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கென்றே, தனிக் கவனம் செலுத்தும் அம்மாவின் ஆட்சியில், எதிர்காலத்திலாவது, நீண்டகாலக் கடன் கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சுட்டிக்காட்டியதைப்போல இங்கே உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு முதலிலேயே நான் பதிலை அளித்து இருக்கிறேன். எனவே இந்தத் திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் அந்தக் கடனைப் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இருக்கின்ற பல கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாத சங்கங்களாக, அதாவது over due அதிக வட்டியாகி பணம் கட்ட முடியாத நிலையில் அவையெல்லாம் செயல்படாத சங்கங்களாக பல கிராமங்களிலே இருக்கின்றன. அந்தக் கிராமச் சங்கங்களுக்கு கடன் வழங்குகின்ற நிலை இல்லை. எனவே அப்படிப்பட்ட சங்கங்களிலும் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குகிற ஒரு நிலையை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நலிவுற்ற அந்தச் சங்கங்களெல்லாம் இப்போது கண்டறியப்பட்டு, அந்தச் சங்கங்கள் முடக்கி வைக்கப்பட்டு பக்கத்திலே இருக்கிற, நல்ல சங்கங்களோடு, பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இருக்கிற சங்கங்களோடு இப்போது இணைக்கப்பட்டு வருகின்றன. அப்படி இணைக்கப்பட்டு அந்தப் பகுதிவாழ் மக்கள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயனைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 ஏப்ரல் 28]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. வெங்கடாஜலம்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் சிறு வணிகக் கடன் வழங்குவதிலே, நுகர்வோர் கடன் வழங்குவதில் வங்கிகளுக்குக் குறிப்பிட்ட அளவுதான் கடன் வழங்க வேண்டும் என்று அரசாணை உள்ளதா? அப்படி இருக்குமேயானால், நகர்ப்புறங்களில் இருக்கின்ற அந்த ஆணையைத் தளர்த்தி அதிக அளவிலே கடன் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே. வங்கிகளிலே கடன்களைப் பெறுகின்றபோது அவர்கள் என்ன மாதிரியான கடன்களைப் பெற இருக்கின்றார்கள் என்பதற்கேற்ப ரூ.1 இலட்சத்திலேயிருந்து 10 இலட்சம் வரைகூட கடன்களை வழங்க வங்கிகள் தயார் நிலையிலே இருக்கின்றன. அவர்கள் சொல்கிற அந்த விதிமுறைகளுக்கு ஏற்ப நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் அணுகுவார்களேயானால் அந்தக் கடன்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 345, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்

345—

முழுநேர நியாய விலைக் கடை

***14826—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் 500-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ள ஊர்களில் இயங்கிவரும் பகுதிநேர நியாயவிலைக் கடையினை முழுநேர நியாயவிலைக் கடையாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS